அசல் வழக்கு 53/2021
நாள் :23.01.2025
வா.சா. : 1
பெயர் : அன்பழகன்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலம் தருவதாக சொல்லி பணம் வாங்கினார்கள். ஆனால் தற்போது நிலத்தை எழுதி தரமறுக்கிறாரகள். அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சந்திரன், அன்பரசி, சீதாலெட்சுமி, அரவிந்த் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதி தருவதாக சொன்ன சொத்து எங்குள்ளது என்றால் தெற்கு கார்குடி என்ற ஊரில் உள்ளது. எவ்வளவு நிலம் எனக்கு தருவதாக பேசியிருந்தார்கள் என்றால் 14 மா. மேற்படி 14 மா நிலத்திற்கும் யார் உரிமையாளர் என்றால் சந்திரன் தான் உரிமையாளர். சந்திரன் உரிமையாளர் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் பார்த்தேனா என்றால் அவர் பெயரில் உள்ள கிரயப்பத்திரம் பார்த்தேன். அந்த நிலத்தை நான் தான் சாகுபடி செய்து வந்தேன். நான் பார்த்ததாக சொல்லும் பத்திரம் சந்திரனுக்கு கல்யாணி அம்மாள் எழுதிக்கொடுத்த பத்திரமா என்றால் ஆமாம். சந்திரனுக்கு கல்யாணியம்மாளிடமிருந்து நிலத்தை நான்தான் வாங்கி கொடுத்தேனா என்றால் நான் தான் நிலத்தை பேசிக்கொடுத்தேன் ஆனால் ரிஜிஸ்டர் செய்யும்போது என்னை அழைக்காமல் தந்திரமாக ஒதுக்கிவிட்டார். சந்திரனிடம் இந்த நிலம் வாங்குவது தொடர்பாக ஏதும் ஆவணம் எழுதிவாங்கியிருக்கிறேனா என்றால் 1 லட்சம் ரூபாய் பணம் வாங்கிகொண்டு போக்கியம் மட்டும் எழுதிக்கொடுத்தார். கிரய ஒப்பந்தம் எழுதி வாங்கவில்லையா என்றால் நம்பிக்கையின் பேரிலும் அவர் எனது உறவினர் என்பதாலும் எழுதி வாங்கவில்லை. மேற்படி 14 மா நிலத்திற்கு எவ்வளவு கிரயத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் விலை நிர்ணயம் செய்யாமலே பணம் வாங்கிகொண்டிருந்தார். நான் சொன்ன போக்கிய பத்திரம் எனக்கு சந்திரன் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரி. அவர் மனைவி அன்பரசி எழுதிக்கொடுத்தார். ஆனால் எனக்கு சொத்தின் உரிமையாளர் சந்திரன் என்பது ஏற்கனவே தெரியும் என்றால் சரி. முதன்முதலில் தொகை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 2011 முதல் 2016 வரை பணம் சீத்தாலட்சுமி பெயரிலும் அன்பரசி பெயரிலும் வங்கி

K. அன்பழகன்

கணக்கில் போடப்போட வாங்கிகொண்டார்கள். எப்போது நிலத்தை எழுதிக்கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள் என்றால் 2016 முதல் நிலம் அதிக விலைக்கு விற்பதாகவும் பணத்தை வேண்டுமானால் திரும்ப கொடுத்து விடுகிறேன். நிலத்தை எழுதிக்கொடுக்க மாட்டேன் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். 1ம் பிரதிவாதி சந்திரன் சென்னையில் கொஞ்ச நாட்கள் இருந்தார் என்றால் டிரைவராக இருந்தார். தாவா சொத்து சந்திரன் பெயரிலும் இருந்தாலும் என்னுடைய மேற்பார்வையில் விட்டிருந்தார் என்றால் சரி. 2019ல் தனது மகன் பெயரில் எழுதிவிட்டார். எப்போதிலிருந்து என் மேற்பார்வையில் நிலம் இருந்தது என்றால் 1994 முதல் 2016 வரை இருந்தது. 1994ல் மேற்படி சொத்திற்கு சந்திரன் உரிமையாளர் இல்லை என்றால் சரி. அப்போது கல்யாணியம்மாள் உரிமையாளர். வாசாஆ 1 ஆவணத்தின்படி 2007ல் தான் சந்திரன் உரிமையாளர் ஆனார் என்றால் சரி. மேற்படி சொத்தை எழுதிக்கொடுக்க வேண்டுமென்ற பரிகாரத்தை தவிர வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் பணத்தை திரும்ப கொடுக்குமாறு பரிகாரம் கேட்டிருக்கிறேன். (1 முதல் 3 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு 04.02.2025 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது)

Kஅம்பரகம்

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/1/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

23/1/25